**<u>DEPOSITION OF WITNESS</u>**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **D.VC. No. 1/2024** |
| **Prosecution Witness** | **:** | **P.W. 1** |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : மரிய அந்தோணி செல்வி | | : | |
| Father / Husband Name | : அந்தோணிராஜ் | | : | |
| Village | : | Religion | : | |
| Taluk | : | Age | : | |

(Respondent absent. Counsel Petition filed u/s.126 Cr.P.C. Petition heard and allowed. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 20/**11/2024**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( எதிர்மனுதாரர் தரப்பில் )</u>**

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள படி எதிர்மனுதாரர் வீட்டில் என்னை உடலளவிலோ, மனதளவிலோ துன்புறுத்தியதற்கு காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 6வது பத்தியில் சொல்லியுள்ள படி எதிர்மனுதாரர்கள் வீட்டார்கள் தான் முதல் எதிர்மனுதாரரை பணம் கொடுத்து அரசு வழக்கறிஞராக ஆக்கிவிடலாம் என்று கூறினார்கள். நான் ஒரு அரசு மருத்துவராக இருந்து எவ்வாறு பணம் கொடுத்து அரசு வேலைக்கு செல்லலாம் என்பரை நம்பினேன் என்றால், எதிர்மனுதாரர்கள் வீட்டார்கள் அனைவரும் என்னிடம் நம்பிக்கை வரும்படி பேசினார்கள். நான் வழக்கிற்காக மேற்படி சங்கதிகளை பொய்யாக கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனக்கு 30.01.2019ம் தேதியில் வளைகாப்பு எதிர்மனுதாரா் வீட்டில் வைத்து நடைபெற்றது. வளைகாப்பு முடிந்தவுடன் அன்றைய தினமே நான் சென்னைக்கு வந்துவிட்டேன். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 8வது பத்தியில் சொல்லியுள்ள படி முதல் எதிர்மனுதாரரின் தம்பிக்கு மேற்படி 30.01.2019ம் தேதியில் திருமணம் நடைபெற இருப்பதாக இதற்கு தான் கூட்டி வந்தீா்களா என்று எதிர்மனுதாரரிடம் கேட்டதாக சொல்லியுள்ளேன். மேற்படி இரண்டு சங்கதிகளும் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது என்றால், அன்றைய தேதியில் காலையில் முதலாம் எதிர்மனுதாரரின் தம்பிக்கு திருமணம் நடைபெற்றது. அன்றைய தினமே நான் மருத்துவ பரிசோதனைக்கு சென்ற போது எனது உடல்நிலை கருதி அன்றைய தேதியிலே மாலையில் வீட்டிற்கு மட்டும் வளைகாப்பு நடத்தினார்கள். நான் மேற்படி சங்கதிகளை எனது மனுவிலும், சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை.

B IYAPPAN
Digitally signed by B IYAPPAN
Date: 2024.11.20 17:39:07 +0530

எனக்கு குழந்தை பிறந்த விவரத்தை எதிர்மனுதாரருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் மூன்று நாள் கழித்து தான் தெரிவித்தோம் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது எதிர்மனுதாரர் வீட்டிற்கு தெரிவித்தோம். ஆனால் அவர்கள் யாரும் வரவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 11வது பத்தியில் சொல்லியுள்ள படி எதிர்மனுதாரர் எந்த தேதியில் என்னை வீட்டிற்கு கூட்டிச் சென்றதாக தேதி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை. 2019ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கூட்டிச் சென்றார். எனது தந்தை எதிர்மனுதாரருக்கு லாரி வாங்க முன்பணமாக ரூ.10 லட்சம் கொடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி தொகையை எனது தந்தை ரொக்கப் பணமாக கொடுத்தார். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

பின்னர் எதிர்மனுதாரர் லாரியை வைத்து தொழில் செய்து நஷ்டமடைந்ததாக சொல்லியுள்ளேன். அது என்ன வகையான நஷ்டம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 12வது பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபிக்கும் வகைக்கு எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவங்கள் நடைபெறும் என்று தெரியாததால் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் AAI யில் சட்ட ஆலோசகராக பணிபுரிவதாக சொல்லப்படும் சங்கதியை அதற்கான தகுதி தேர்வு எதுவும் எழுதாமல் எவ்வாறு பணிபுரிந்தார் என்று நம்பினேன் என்றால், அவ்வாறு தேர்வு எழுத வேண்டும் என்ற சங்கதி எனக்கு தெரியாது. நான் மேற்படி சங்கதிகள் அனைத்தையும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 14வது பத்தியில் சொல்லியுள்ள படி எனது வீட்டில் வீட்டு உபயோக பொருட்கள் வாங்கி கொடுத்ததற்கான ரசீதுகள் எதுவும் தற்போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் எதிர்மனுதாரரும் எங்கு வாடகைக்கு வீடு பார்த்திருந்தோம் என்றும், பணம் எவ்வாறு வாடகைக்கு முன்பணமாக செலுத்தினேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். செங்குன்றத்தில் உள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு சென்றோம். வாடகை முன்பணத்தை ரொக்கப் பணமாகத்தான் கொடுத்தேன். எதிர்மனுதாரர் நான்கைந்து நபர்களுடன் குடித்துவிட்டு வீட்டிற்கு வருவதாக சொல்லியுள்ள நிலையில் அவர்களின் பெயர்களை சொல்லவில்லை. மேற்படி நபர்களை இந்த வழக்கில் சொல்ல வேண்டாம் என்று சொல்லவில்லை.

நான் பாராசிட்டம்மல் மாத்திரைகளை அதிகளவில் உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றேன் என்றும், என்னை என் பெற்றோர்கள் வனஜா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று காப்பாற்றினார்கள் என்றும் சொல்லியுள்ளேன். தற்கொலைக்கு முயற்சி செய்வது இந்திய தண்டனைச் சட்டப் படி குற்றம் என்பது எனக்கு தெரியாது. என்னால் எதிர்மனுதாரர் கொடுக்கும் பிரச்சனைகளை பொறுத்துக் கொள்ள முடியாததால் நான் தற்கொலை முயற்சி மேற்கொண்டேன். மேற்படி தற்கொலை முயற்சி மேற்கொண்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் விபத்து பதிவேடு பதிவு செய்வார்கள் என்பது எனக்கு தெரியும். நான் மருத்துவமனையில்

B IYAPPAN Digitally signed by B IYAPPAN Date: 2024.11.20 17:39:14 +0530

அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இனி வரும் காலங்களில் அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 15வது பத்தியில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வழக்கறிஞர் என்று தெரிந்தும், அவரை அவமானப்படுத்தும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அடித்து வீட்டில் உள்ள நகைகளை எடுத்துச் சென்றதாக சொல்லியிருக்கும் நிலையில் அது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. அதே பத்தியில் எனது பெற்றோர்கள் என்னை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றதாக சொல்லியிருக்கும் நிலையில் எந்த மருத்துவமனை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. என் பெற்றோர்கள் அருகிலுள்ள தேவி கிளினிக்கிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு பரிசோதித்து முதலுதவி செய்துவிட்டு என்னை வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். நான் மேற்படி சங்கதிளை எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் 18வது பத்தியில் சொல்லியுள்ள படி எதிர்மனுதாரர் இந்த வழக்கில் இருந்து தப்பிக்க வழக்கறிஞர் மூளையுடன் செயல்பட்டு சங்கதிகளை ஜோடித்துள்ளார் என்று சொல்லியுள்ளேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த அனைத்து சம்பவங்களையும் தெரிந்து கொண்டு நான் தான் வழக்கறிஞர் மூலமாக பொய்யான சங்கதிகளை ஜோடித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. நான் எதிர்மனுதாரருக்கு எதிராக ஐனுடீ வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரருக்கு போன் செய்து பரஸ்பர விவாகரத்து கேட்டேன் என்றாலும், அதற்கு எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ்வதாக கூறியதால், நான் எதிர்மனுதாரருக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்து, தற்போது எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு எதிராக இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பொதுவாக, பெண்கள் விழா மற்றும் வீட்டு நிகழ்ச்சிகளில் நகைகள் அணிவது வழக்கம் என்றால் சரிதான். அதேபோல் வளைகாப்பு அன்று நான் எனக்கு திருமணத்தன்று போடப்பட்ட அனைத்து நகைககையும் போட்டு, எனது வீட்டிற்கு கிளம்பினேன் என்றாலும், நகைகள் அனைத்தும் என் வசம் உள்ளது என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போது என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்பதால் நான் எனது பெற்றோரின் பேச்சைக் கேட்டு மேற்படி வழக்குகளை தாக்கல் செய்துள்ளேன் என்றால், நான் எனது பெற்றோர் பேச்சை கேட்கவில்லை. தற்போது எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால், எனக்கு அவருடன் வாழ விருப்பமில்லை. எதிர்மனுதாரால் எனக்கு ஏற்பட்ட அவமானங்கள் மற்றும் அடி, உதைகளும் இதற்கு மேல் என்னால் பெற முடியாது.

எதிர்மனுதாரர் அவரது மகளுக்கு பொன்மகள் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.10 ஆயிரம் செலுத்தி வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், மேற்படி தொகையை நான் தான்

B IYAPPAN Digitally signed by B IYAPPAN Date: 2024.11.20 17:39:20 +0530

செலுத்தி வருகிறேன். குழந்தையின் வங்கி கணக்கு புத்தகம் என்னிடம் தான் உள்ளது. வங்கிக் கணக்கில் பணம் போடுவதற்கு வங்கி கணக்கு புத்தகம் தேவை இல்லை என்பது எனக்கு தெரியும். நான் தான் எதிர்மனுதாரருக்கு கேட்கும் போதெல்லாம் செலவுக்கு பணம் கொடுத்து வந்துள்ளேன். நான் அரசுப் பணியில் இருப்பதால் எதிர்மனுதாரரை விட நான்கு மடங்கு அதிகமாக சம்பளம் பெற்று வருகிறேன் என்றாலும், எதிர்மனுதாரருக்கு நான் தான் வாழ்க்கை பொருளுதவி தொகை கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு எனது மாத வருமானத்தை தவிர வேறு எந்த வருமானமும் இல்லை. எதிர்மனுதாரருக்கு கோடி கணக்கில் சொத்துக்கள் மற்றும் வருமானம் உள்ளது. எனக்கு வீட்டு வாடகைப் படி, மருத்துவ படித் தொகை, பயணப் படித் தொகை உண்டு. அதுபோக எனது சம்பளத்தில் ஸ்ரீகு பணம் பிடித்தம் செய்கிறார்கள் என்றால் சரிதான். நான் வசதியாக வாழ்ந்து வருகிறேன் என்றாலும், நான் எதிர்மனுதாரரிடம் விவாகரத்து கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்து மிரட்டி வருகிறேன் என்றாலும் எனக்கும் எனது குழந்தைக்கும் எதிர்மனுதாரர் வாழ்க்கை பொருளுதவி தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்றாலும் சரியல்ல.

நாளது தேதி வரை எதிர்மனுதாரர் எனக்கும் என் குழந்தைக்கும் எந்தவித தொல்லையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது குடும்பத்தாரும் எதிர்மனுதாரரை வீட்டோட மாப்பிள்ளையாக இருக்க கூறினோம் என்றாலும், அதை எதிர்மனுதாரர் மறுத்துவிட்டதால், எந்தவித முகாந்திரம் இல்லாமல் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது மனுவிலும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகளை நானே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான்.

B IYAPPAN

Digitally signed by B IYAPPAN
Date: 2024.11.20 17:39:26 +0530